

பாடம் 11

செப்டம்பர் 7-13

# வருகை நம்பிக்கையை வாழ்ந்து காட்டுதல்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *லூக் 18:1-8; மத் 24-25; 1கொரி 15:12-19; பிர 8:14; 12:13,14; வெளி 21:1-5; 22:1-5.*

**மனன வசனம்:** ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக. 1கொரிந்தியர் 15:58.

"'பரலோகராஜ்யமானது இன்றைக்கும் இருக்கிற நிஜமான ராஜ்யம். அதில் நாம் குடிமக்களாகலாம்'' என்று இயேசு சொன்னார். இந்தச் செய்தியை அறிவிக்கவும், நற்செய்தி மற்றும் பணிவிடைகள் மூலம் அவருடைய ராஜ்யத்தை எடுத்துக்காட்டவும், அவர் தம் சீடர்களை அனுப்பினார். அதாவது, அவர்கள் இலவசமாய்ப் பெற்றிருந்தார்கள்; இலவசமாய்க் கொடுக்கவேண்டியிருந்தது.

ஆனால், தம்முடைய ராஜ்யம் 'இவ்வுலகத்திற்குரியதல்ல' என்றும், இனிதான் முழுமையாக வரவிருக்கிறது என்றும் இயேசு சொன்னார். யோவான் 18:36. இயேசு மனிதனாக வந்து, ஊழியம்செய்து, மரித்து, உயிர்த்தெழுந்து தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபித்தார். ஆனால், இந்தப் பூலோக ராஜ்யங்கள் அகற்றப்பட்டு, தம்முடைய ராஜ்யம் முழுமையாக வந்து, தேவன் அரசாளப்போகும் நாளையும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்.

அட்வென்ட்டிஸ்ட் என்றால், இந்த ராஜ்யத்திற்காகவும், வருகைக்காகவும் நம்பிக்கையோடு காத்திருப்பவர். இந்த நம்பிக்கைதான், இப்போதைய வாழ்க்கையை முற்றிலும் மாற்றுகிறது. இனி வரப்போகும் உலகத்தின் தன்மையை உணர்ந்து, இப்போதே செய்ய வேண்டிய மாற்றங்களைச் செய்து, வாழப் பிரயாசப்படுவோம்.

*2019, செப்டம்பர் 14 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# 'எதுவரைக்கும் ஆண்டவரே?'

அடிமைத்தனம், நாடுகடத்தல், அடக்குமுறை, வறுமை போன்ற அநியாயங்களை அனுபவித்தவர்கள், தேவன் தலையிடும்படி அவரை நோக்கிக் கூப்பிடுவதை வேதாகமத்தில் காணலாம். எகிப்திலிருந்த அடிமைகள், பாபிலோனிலிருந்த இஸ்ரவேலர் போன்ற பலர் தேவன் தங்கள் கூக்குரல்களைக் கேட்டு, உபத்திரவத்தைக் கண்டு, தங்களுக்கு அவர் நியாயம்செய்யுமாறு வேண்டினார்கள். தம் மக்களை தேவன் விடுவித்தார், சிறையிருப்பைத் திருப்பினார்; ஒடுக்கினவர்களையும் எதிரிகளையும் பழிவாங்கினார்.

இவை தற்காலிக விடுதலைகள். தீமைக்கு முடிவுகட்டி, தள்ளுண்டவர்களைத் தூக்கிவிட தேவன் இறுதியாகத் தலையிடப்போகும் ஒரு நாள் குறித்து பல தீர்க்கதரிசிகள் சொல்லியிருக்கிறார்கள். 'கர்த்தாவே, எதுவரைக்கும்?' என்றும் கேட்டுவந்தார்கள். உதாரணமாக, நாடுகடத்தப்பட்ட இஸ்ரவேலரைப்பற்றி கர்த்தருடைய தூதனானவர், ''கர்த்தாவே, எந்த மட்டும் இரங்காதிருப்பீர்?'' என்று கேட்கிறார். சக 1:12.

துன்மார்க்கர் செழித்து, வளமாக வாழும்போது, நீதிமான்கள் வன்கொடுமைக்கும், அடக்குமுறைக்கும், தரித்திரத்திற்கும் ஆளாவதாக பல சங்கீதங்களில் புலம்பல் சத்தம் கேட்கிறது. தேவன் தலையிடும்படி சங்கீதக்காரர் வேண்டுகிறார். இந்த உலகம் தேவன் விரும்பினபடி, சிருஷ்டித்தபடி இல்லையென்பதை அறிந்து, தீர்க்கதரிசிகளும் ஒடுக்கப்பட்டவர்களும் கேட்டதுபோல 'கர்த்தாவே, எதுவரைக்கும்?' என்று சங்கீதக்காரரும் கேட்கிறார். சங் 94:3-7.

தேவன் நியாயமுள்ளவர், தம் மக்களிடம் நியாயத்தை எதிர்பார்க்கிறார் என்று நம்புகிறவர்களால் அநியாயத்தைத் தாங்கவே முடியாது. உலகத்தில் காணப்படும் தீமைகளும், அவற்றைக் கண்டும் தேவன் பொறுமையாக இருப்பதும் தேவபிள்ளைகளைப் பொறுமையிழக்கச் செய்கிறது. அதனால்தான் தீர்க்கதரிசிகள் சிலசமயங்களில், ''கர்த்தாவே, நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன். நீர் கேளாமலிருக்கிறீரே! கொடுமையினிமித்தம் நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் இரட்சியாமலிருக்கிறீரே!'' என்று வேதனையைக் கொட்டித் தீர்க்கிறார்கள். ஆபகூக் 1:2.

தேவனுடைய விடுதலைக்காகவும், புதுசிருஷ்டிப்புக்காகவும் சிருஷ்டி அனைத்தும் ஏங்கித் தவிப்பதாக புதிய ஏற்பாடு சொல்கிறது. ரோமர் 8:19-22. தேவனை விசுவாசித்ததினிமித்தம் கொல்லப்பட்டவர்களுக்காக 'தேவரீர் எதுவரைக்கும்?' என்று கேட்கப்படுகிறது. வெளி 6:10. ஒடுக்கப்பட்டோர், உபத்திரவப்பட்டோருக்காக தேவன் தலையிட வேண்டுமென்கிற அதே அங்கலாய்ப்புதான் இதுவும்.

**தேவன்தங்களுக்காகத் தலையிடவேண்டும் என்று சொல்கிற அவருடைய மக்களுடைய ஜெபங்களுக்கும் கூக்குரல்களுக்கும் இயேசு சொல்லும் பதில் என்ன? லூக் 18:1–8. விசுவாசம் தேவை என்பது இதில் எவ்வாறு வெளிப்படுகிறது?**

# ஒரு வகையான நம்பிக்கை

'இந்த வாழ்க்கை வேண்டாம்; இனியொரு நல்வாழ்க்கை இருக்கிறது' என்று விசுவாசிகளை மதநம்பிக்கை இழுத்துச்செல்வதாக விமர்சிக்கிறார்கள். 'இன்னொரு வாழ்க்கை இருப்பதாக நினைப்பது பக்திப் போர்வையில் தப்பிக்கிற முயற்சி' என்றும், 'அது இந்த உலகத்திற்கும் சமுதாயத்திற்கும் பயனற்றது' என்றும் சொல்கிறார்கள். சில சமயங்களில் விசுவாசிகள்கூட இந்த விமர்சனங்களை ஆதரிக்கிறார்கள். அதாவது, இப்படிப்பட்ட மனநிலைகளை வளர்க்கிறார்கள்; பிரசங்கிக்கிறார்கள்; பிரதிபலிக்கிறார்கள்.

"இயேசு வரும்போது எல்லாம் சரியாகிவிடும்; அதுவரைக்கும் இருக்கிற நிலையிலேயே நீங்கள் இருங்கள்" என்று தரித்திரர், ஒடுக்கப்பட்டோரிடம் அதிகாரத்தில் உள்ளவர்கள் சொல்வதும் கொடுமைதான்.

நம் உலகம் விழுந்து, பிளவுபட்டு, துயர்நிறைந்த இடமாக விளங்குகிறது. 'தேவன் இந்த உலகைச் சீர்ப்படுத்துவார். அநியாயத்திற்கும் வேதனைக்கும், துக்கத்திற்கும் முடிவுகொண்டுவருவார். ஒழுங்கற்ற இந்த உலகிற்குப் பதிலாக மகிமையும் நீதியுமான ராஜ்யத்தை ஸ்தாபிப்பார்' என்று ஆவலோடு எதிர்பார்ப்பதில் தவறில்லை. அந்த நம்பிக்கையும் வாக்குறுதியும் இல்லாவிட்டால், நமக்கு வேறு என்ன நம்பிக்கை தான் இருக்கிறது.

உலகத்தின்முடிவுபற்றி இயேசு பிரசங்கித்தபோது (மத் 24,25), முதல் பாதி முழுவதிலும், தப்பித்துக்கொள்ள வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தினார். "அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை" என்றுகூட சொன்னார். மத் 24:22. ஆனால், தேவ வாக்குறுதிகளின் முக்கியத்துவம்குறித்து அறிமுக வார்த்தைகளாகத்தான் இவற்றைச் சொன்னார். கிறிஸ்தவ விசுவாசத்தின்படியான எதிர்கால நம்பிக்கையைக் காரணங்காட்டி 'தப்பித்தால்' போதுமென நினைப்பது, இயேசு சொன்ன பிற முக்கியக் கருத்துகளைக் காணவிடாமல் செய்துவிடும்.

**கேள்வி: மத் 24,25 அதிகாரங்களில், இயேசுவின் பிரசங்கத்திலுள்ள மிகமுக்கியக் கருத்துகள் யாவை? இயேசுவின் வருகைக்காகக் காத்திருப்பவர்கள் எவ்வாறு வாழவேண்டுமென அங்கு இயேசு சொல்கிறார்?**

எதிர்காலம் குறித்து நம் கருத்து எப்படியோ அப்படித்தான் இவ்வுலகவாழ்க்கையில் அதன் தாக்கம் இருக்கும். நம் உலகத்தின் எதிர்காலம்குறித்து தேவன் சொல்கிற வாக்குறுதிகளை நாம் சார்ந்திருப்பதே நாம் முழுஆற்றலுடன் செயல்படுவதற்கான ஊக்கியாக இருக்கவேண்டும்; அதுதான் வளமான, ஆழமான வாழ்க்கையைத் தரும்; மற்றவர்களிலும் அது மாற்றத்தை உண்டுபண்ணும்.

இயேசுவின் இரண்டாம் வருகைகுறித்த வாக்குறுதியும் நம்பிக்கையும் எவ்வாறு இவ்வுலகில் நாம் வாழ்கிற வாழ்க்கையில், குறிப்பாக எளியவர்களுக்கு நாம் உதவுகிற விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தவேண்டும்?

## உயிர்த்தெழுதல் நம்பிக்கை

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப்பிறகு வளமான எதிர்காலம் இருக்கிறது என்பதுமட்டும் கிறிஸ்தவர்களின் நம்பிக்கையல்ல. இயேசு உயிர்த்தெழுந்ததை நேரடியாகக் கண்ட ஆதிகாலக் கிறிஸ்தவர்கள், அவர் வருகை நிச்சயமென உணர்ந்தார்கள். மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தவர், பாவத்தையும் அதன் விளைவையும் அகற்றி, உலகைப் புதுப்பிக்க நிச்சயம் வருவாரென்பதை உறுதியாக நம்பினார்கள். 1கொரி 15:22,23.

வருகைகுறித்த நம்பிக்கையில் உயிர்த்தெழுதலை ஒரு முக்கிய அம்சமாக பவுல் கருதினார். இயேசுவின் உயிர்த்தெழுதலை வைத்துதான் மற்ற அனைத்தையும் உண்மையெனச் சொல்லமுடியும் என்றார். 'கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்.' 1கொரி 15:17. நம்முடைய அனைத்து நம்பிக்கைகளுக்கும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் எவ்வளவு முக்கியம் என்பதைச் சிந்தியுங்கள்.

**கேள்வி: கிறிஸ்தவ வரலாற்றில் உயிர்த்தெழுதலின் சத்தியம் எவ்வாறு முக்கியப் பங்கு வகிக்கிறதென்று கிறிஸ்தவரல்லாத ஒருவர் கேட்டால், அவருக்கு எவ்வாறு அதை விளக்குவீர்கள்? 1கொரிந்தியர் 15:12-19.**

இயேசு உயிர்த்தெழுந்ததைப் பார்த்த சீடர்களின் வாழ்க்கை அடியோடு மாறியது. பரலோகராஜ்யம்பற்றி அறிவித்து, அதை ஸ்தாபிக்கும்படி அவர்களிடம் இயேசு சொல்லியிருந்தார். மத் 10:5-8. ஆனால், இயேசு மரித்ததும், தைரியம் போனது; நம்பிக்கை தகர்ந்தது. பிறகு இயேசு உயிர்த்தெழுந்து, ஊழியக்கட்டளையைக் கொடுத்து, (மத் 28:18-20) ஆவியானவரின் வல்லமையைப் பெற்ற பிறகுதான் (அப் 2:1-4), உலகத்தை மாற்றுகிறவர்களாக சீஷர்கள் மாறினார்கள். இயேசு ஸ்தாபித்திருந்த ராஜ்யத்திற்கேற்றவர்களாய் வாழ்ந்தார்கள்.

ஆதிகால விசுவாசிகள் மரணத்தின் அதிகாரத்திலும் பயத்திலுமிருந்து விடுதலைபெற்று, இயேசுவின் நாமத்தில் தைரியத்தோடு வாழ்ந்து, சுவிசேஷத்தைப் பகிர்ந்தார்கள். 1கொரி 15:30,31. மரணத்தைக் கொண்டுவருகிற அதே தீமைதான் உபத்திரவம், அநியாயம், வறுமை, சகலவிதமான அடக்குமுறை போன்றவைகளாக வெளிப்படுகிறது. மரணத்தின்மேல் வெற்றிபெற்ற இயேசு, இவை அனைத்திற்கும் ஒருநாளில் முடிவுகட்டப் போகிறார். 1கொரி 15:26.

இப்போது நாம் உதவிசெய்கிற நபர்களும்கூட ஒருநாளில் மரிக்கத்தான் போகிறார்கள். எனவே, இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் தருகிற நம்பிக்கையை மற்றவர்களும் கண்டுகொள்ள உதவுவது ஏன் மிகவும் முக்கியமானது?

# நியாயத்தீர்ப்பு நம்பிக்கை

**கேள்வி: பிரசங்கி 8:14 சொல்வது முற்றிலும் உண்மை என்பதை எவ்விதங்களிலெல்லாம் உணர்ந்திருக்கிறீர்கள்?**

---

---

உபத்திரவம், ஒடுக்குதல், துயரம் போன்றவை கொடுமை என்றால், மனதைப் புண்படுத்துவதும், ஏளனமாகப் பேசுவதும், அர்த்தமின்றி யாருக்கும் தெரியாமல் அவ்வாறு செய்வதும் மிகக்கொடுமை. காரணமேயின்றி புண்பட்டிருப்பதை உணரும்போது, ஆரம்பத்திலிருந்த வலியை அது மேலும் அதிகமாக்கும். கடைசிவரை நியாயம் கிடைக்காமல் போவது பெரும் அவலம். மனித இனம் ‘அவலமிக்க நிலையில்’ இருப்பதாக இருபதாம் நூற்றாண்டின நாத்திக எழுத்தாளர்கள் புலம்பினார்கள். நியாயம் கிடைக்கும் என்கிற நம்பிக்கையும், நியாயமான தீர்ப்பு கிடைக்கும் என்கிற நம்பிக்கையும், எல்லாம் சரியாகிவிடும் என்கிற நம்பிக்கையும்மட்டும் இல்லையென்றால் நம் உலகம்கூட அவலமான உலகமாக இருக்கும்.

ஆனால் பிர 8:14 சொல்வது இறுதி நிலையல்ல. சாலொமோன் இன்னொரு விஷயத்தை வலியுறுத்துகிறார். மாயைபற்றிப் புலம்பிவந்தவர், சட்டென்று ‘தேவன் நியாயந்தீர்க்கப் போகிறார்’ என்கிறார். எதுவுமே மாயை அல்ல. ஒவ்வொன்றுக்கும் கணக்குக் கொடுத்தாகவேண்டும் என்று சொல்கிறார்.

**கேள்வி: இங்கு நாம் செய்கிற ஒவ்வொன்றும் முக்கியத்துவம் வாய்ந்ததென்று பிரசங்கி 12:13,14 எவ்வாறு கூறுகிறது?**

---

---

தேவனுடைய தன்மை, நம் வாழ்க்கை, நாம் வாழ்கிற உலகம் குறித்த நம் நம்பிக்கை என்னவாக இருக்கிறதோ, அதன்படிதான் நியாயத்தீர்ப்புகுறித்தும் நம் நம்பிக்கை அமைகிறது. தேவன் சிருஷ்டித்து, அன்புகூருகிற ஓர் உலகில் நாம் வாழ்கிறோம்; இந்த உலகம் தடம்புரண்டுபோனது; இயேசுவின் வாழ்க்கை, மரணத்தின்மூலம் இவ்வுலகத்தை மறுசீரமைக்க தேவன் திட்டமிட்டுச் செயல்படுகிறார். இந்த உலகத்தைச் சீர்ப்படுத்துவதில் தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஒரு முக்கியப் பங்காற்றுகிறது. இந்த உலகத்தில் ஒதுக்கப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்டு, அடக்குதலுக்கு ஆளான அநேகருக்கு, நியாயத்தீர்ப்பின் செய்தி நிச்சயமாகவே நற்செய்தியாக இருக்கும்.

அநியாயத்திற்குத் தக்க நியாயம் கிடைக்கவேண்டும் என்கிற வெகுகால ஏக்கத்திற்கு ஒரு நாள் நியாயம்கிடைக்கப் போகிறது. இந்த வாக்குறுதியிலிருந்து நாம் எவ்வாறு நம்பிக்கை பெற்றுக்கொள்ளலாம்?

# இனி கண்ணீரும் இல்லை, வேதனையும் இல்லை

**கேள்வி: வெளி 21:1-5; வெளி 22:1-5 சொல்கிற வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கும்? பாவம், மரணம், வேதனை, கண்ணீர் இல்லாத ஒரு வாழ்க்கைபற்றி யோசிப்பது எளிதாகவா இருக்கிறது?**

---

பாவம் அழிக்கப்பட்ட பிறகு அற்புதமான, மகிமையான ஒரு வாழ்க்கை நமக்குக் காத்திருப்பதை வேதாகமம் விவரிக்கிறது. சொல்லப்பட்டிருப்பது கொஞ்சம்தான். அங்கு என்னவெல்லாம் இருக்காது என்று சொல்கிற அளவுக்கு அங்கு என்னவெல்லாம் இருக்குமென்றும் இந்த வசனங்கள் சொல்கின்றன. நமக்குத் தெரிந்ததெல்லாம் இந்த உலகம்தான்; அதனால்தான் வேதனை, உபத்திரவம், மரணம், பயம், அநியாயம், தரித்திரம் இல்லாத ஒரு வாழ்க்கையைக் கற்பனைசெய்து பார்ப்பது கடினமாக இருக்கிறது.

தேவன்தாமே 'கண்ணீர் யாவையும் துடைப்பார்.' வெளி 21:4. இது இரட்சிக்கப்பட்டோருக்குக் கிடைக்கும் பாக்கியம். வரலாறு முழுவதிலும் உபத்திரவப்பட்டவர்களின் வேதனைக்கு முடிவு கட்டப்படுவதுபற்றி இந்த ஒரே வரி சொல்லிவிடுகிறது. அவர்களுடைய உபத்திரவத்தை முடிவுக்குக் கொண்டுவருவது மட்டுமல்ல; அவர்தாமே அவர்களுடைய கண்ணீரைத் துடைக்கிறார்.

பாவவாழ்வாலும், அநியாயமும் துயரமும் நிறைந்த உலகத்தாலும் சிதைத்து, புண்ணாக்கப்பட்டவர்கள் குணமாக்கப்படுவதுபற்றி வெளிப்படுத்தல் கூறுகிறது. பாவத்தால் பலவாறும் பாதிக்கப்பட்டவர்கள் குணமாக்கப்படுகிறார்கள். ஜீவவிருட்சம் பற்றி, 'அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்' என்று யோவான் சொல்கிறார். வெளி 22:2. எனவே மனிதர்களின் வாழ்க்கையை தேவன் புரிந்துகொள்கிறார். அவர்களுக்காக மனதுருகுகிறார். மனிதனாக அவர் இந்த உலகத்தின் தீமைகளை உணர்ந்தார்; அனுபவித்தார்; பார்த்தார்; பாதிக்கப்பட்டார். நாம் ஒவ்வொருவரையும் குணமாக்கி, புதுவாழ்வைத் தருவதே அவருடைய திட்டம்.

அதுவரையிலும், கிறிஸ்துவுக்குள்ளாக நம் பங்கை நாம் செய்ய வேண்டும்; நம் பொறுப்பு சிறியதாக இருந்தாலும், நம்மைச் சுற்றிலும் தேவையோடு இருப்பவர்களுக்கு உதவவேண்டும். அன்பான வார்த்தைகள், ஒருவேளை உணவு, மருத்துவ உதவி, துணிகொடுப்பது, ஆலோசனை சொல்வது என எதைச் செய்தாலும், இயேசு இந்தப் பூமியில் இருந்தபோது வெளிப்படுத்தின அதே சுயதியாகமுள்ள, இரக்கமான, சுயமறுப்புள்ள அன்போடு செய்யவேண்டும்.

நாம் எவ்வளவுதான் முயன்றாலும் இந்த உலகம் போகப்போக மோசமாகிக்கொண்டேதான் இருக்கும். இயேசுவுக்கும் அது தெரியும். அதற்காக அவர் ஊழியம்செய்யாமல் இருக்கவில்லை; அதுபோல நாமும் ஊழியம்செய்யாமல் இருக்கக்கூடாது.

## மேலும் படிக்க:

'தேவனுடைய சத்தம் கேட்டதும், தேவஜனங்களுடைய சிறையிருப்பு மாறுகிறது; வாழ்க்கையின் மாபெரும் போராட்டத்தில் முற்றிலும் தோற்றவர்கள் தங்களுடைய நிர்கதியான நிலைகுறித்த விழிப்புணர்வை அடைகிறார்கள். தவணையின் நாட்களில் சாத்தானுடைய வஞ்சனைகளால் குருடடைந்திருந்தார்கள்; தங்கள் பாவப் போக்கை நியாயப்படுத்தினார்கள். செல்வந்தர்கள் தங்களைவிட கீழானவர்களுக்கு மேலாகப் பெருமைபாராட்டினார்கள்; தேவனுடைய கட்டளைகளுக்கு விரோதமாகச் செல்வம்சேர்த்தார்கள். பசியோடிருந்தவர்களுக்கு உணவுகொடுக்கவில்லை; வஸ்திரமில்லாதோருக்கு வஸ்திரம் கொடுக்கவில்லை; நியாயமாக நடக்கவும், இரக்கத்தைச் சிநேகிக்கவும் மறந்தார்கள். பூலோகச் சந்தோஷங்களுக்காகவும் செல்வங்களுக்காகவும் அவர்கள் தங்கள் ஆத்துமாக்களை விற்றார்கள்; தேவனிடத்தில் ஐசுவரியவான்களாக முயலவில்லை. அதனால், அவர்களுடைய வாழ்க்கை தோல்வியடைந்தது; களிப்புகள் கசப்பாக மாறின; செல்வங்கள் சீரழிந்தன.' — *GC, p 654.*

'மாபெரும் போராட்டம் முடிந்தது. இனி பாவமும் இல்லை; பாவிகளும் இல்லை. சர்வலோகமும் தூய்மையோடு விளங்கும். பரந்துவிரிந்த சிருஷ்டிப்பு முழுவதிலும் சந்தோஷமும் ஒற்றுமையும் கைகோர்த்துச்செல்லும். சர்வத்தையும் சிருஷ்டித்தவரிடமிருந்து ஜீவனும் ஒளியும் மகிழ்ச்சியும் புறப்பட்டு, வரம்புக்கடங்காமல் விரிந்து கிடக்கிற எல்லைகளெங்கும் செல்லும். சிறிய அணுவிலிருந்து பெரிய உலகம்மட்டும், உயிருள்ளதும் உயிரற்றவையுமான சகலமும், தங்கள் பூரண அழகோடும் நிறைவான மகிழ்ச்சியோடும், 'தேவன் அன்புள்ளவர்' என அறிவிக்கும்.' — *EGW, GC, p 678.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *இந்த உலகத்தில் நாம் எவ்வாறு வாழ்கிறோம் என்பது முக்கியமானது என்பது பற்றி இந்தவாரப் பாடத்திலிருந்து எவ்வளவுக்குப் புரிந்துகொண்டீர்கள்? தேவன் இந்த உலகத்தை அழித்துவிட்டு, புதிய உலகைப் படைக்கப்போகிறார். எனவே, இப்போது நாம் எப்படியும் வாழலாமென சிலர் நினைப்பதையும் உங்களுடைய பதிலையும் ஒப்பிடுங்கள். தேவன்தாம் எல்லாவற்றையும் சரிசெய்யப்போகிறாரே என்று சொல்லி, எளியவர்களுக்கு உதவிசெய்யாமல் இருக்கலாமா? இதுபோலச் சொல்லி, ஒடுக்குகிறவர்கள்போல நாமும் நடந்துகொள்ளாமல் இருக்க என்ன செய்யலாம்?*
2. *இரண்டாம் வருகை நெருங்கும் சமயத்தில், தீமையும் துன்பமும் உபத்திரவமும் அதிகரிக்கவே செய்யும். மத்தேயு 24ம் அவ்வாறு சொல்கிறது. மத்தேயு 25இன் வெளிச்சத்தில் இவற்றை நாம் எவ்வாறு புரிந்துகொள்ளலாம்?*

**பாடச்சுருக்கம்: இயேசு வரும்போது, தீமை ஒழியும்; அநியாயம் அகலும்; ஆதிநோக்கத்தின்படி புதிய உலகம் சிருஷ்டிக்கப்படும். அதுதான் வேதாகமம் தருகிற மிகப்பெரிய நம்பிக்கை. இயேசுவின் உயிர்த்தெழுதலை அடிப்படையாகக் கொண்ட இந்த நம்பிக்கை, இன்று நம்மை மாற்றுகிறது; அவருடைய வருகைக்காக நாம் காத்திருக்கிற வேளையில் தேவனுக்கும் பிறருக்கும் சேவை செய்வதற்கான ஊக்கத்தைத் தருகிறது.**